# இஸ்லாம்

## தரம் 3

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்



சகல பாடநூல்களையும் இலத்திரனியல் ஊடாகப் பெற்றுக்கொள்வதற்கு
www.edupub.gov.lk வலைத்தளத்தை நாடுங்கள்.

முதலாம் பதிப்பு - 2017
இரண்டாம் பதிப்பு - 2018
மூன்றாம் பதிப்பு - 2019

எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே.

ISBN 978-955-25-0043-5

இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்காக
இல 110, பாகொட வீதி, பிடகோட்டை,
சிசாரா பிரின்ட்வே பிரைவட் லிமிட்டட்,
அச்சகத்தினால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

ஆனந்த சமரக்கோன்
கவிதையின் பெயர்ப்பு.



''புதிதாகி, மாற்றமடைந்து சரியான அறிவின் மூலம்
நாட்டுக்குப் போன்றே முழு உலகிற்கும் அறிவுச் சுடராகுங்கள்''

## கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி

கடந்து சென்ற இரு தசாப்தங்களுக்கு அண்மிய காலமானது உலக வரலாற்றில் விசேட தொழினுட்ப மாற்றங்கள் நிகழ்ந்ததொரு காலமாகும். தகவல் தொழினுட்பம் மற்றும் ஊடகங்களை முன்னணியாகக் கொண்ட பல்வேறு துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியுடன் இணைந்து மாணவர் மத்தியில் பல்வேறு சவால்கள் தோன்றியுள்ளன. இன்று சமூகத்தில் காணப்படும் தொழில்வாய்ப்பின் இயல்பானது மிக விரைவில் சிறப்பான மாற்றங்களுக்கு உட்படலாம். இத்தகைய சூழலில் புதிய தொழினுட்ப அறிவையும் திறனையும் அடிப்படையாகக் கொண்டதொரு சமூகத்தில் வெவ்வேறு விதமான இலட்சக் கணக்கான தொழில்வாய்ப்புகள் உருவாகின்றன. எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளும் பொருட்டு நீங்கள் பலம்பெற வேண்டுமென்பது கல்வி அமைச்சரென்ற வகையில் எனதும் எமது அரசினதும் பிரதான நோக்கமாகும்.

இலவசக் கல்வியின் சிறப்புமிக்கதொரு பிரதிபலனாக உங்களுக்கு இலவசமாகக் கிடைத்துள்ள இந்நூலை சீராகப் பயன்படுத்துவதும் அதன்மூலம் தேவையான அறிவைப் பெற்றுக்கொள்வதுமே உங்கள் ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும். அத்துடன் உங்கள் பெற்றோர்களுட்பட மூத்தோரின் சிரமத்தினதும் தியாகத்தினதும் பிரதிபலனாகவே இலவசப் பாடநூல்களை அரசினால் உங்களுக்குப் பெற்றுத்தர முடிகிறது என்பதையும் நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஓர் அரசாக நாம், மிக வேகமாக மாறி வரும் உலக மாற்றத்திற்குப் பொருந்தும் விதத்தில் புதிய பாடத்திட்டத்தை அமைப்பதும் கல்வித் துறையில் தீர்க்கமான மாற்றங்களை மேற்கொள்வதும் ஒரு நாட்டின் எதிர்காலம் கல்வி மூலமே சிறப்படையும் என்பதை மிக நன்றாகப் புரிந்து வைத்துள்ளதனாலேயேயாகும். இலவசக் கல்வியின் உச்சப் பயனை அனுபவித்து நாட்டிற்கு மாத்திரமன்றி உலகுக்கே செயற்றிறன்மிக்க ஓர் இலங்கைப் பிரசையாக நீங்களும் வளர்ந்து நிற்பதற்கு தீர்மானிக்க வேண்டியுள்ளது. இதற்காக இந்நூலைப் பயன்படுத்தி நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு உங்களுக்கு உதவுமென்பது எனது நம்பிக்கையாகும்.

அரசு உங்கள் கல்வியின் நிமித்தம் செலவிடுகின்ற மிகக் கூடிய நிதித்தொகைக்கு பெறுமதியொன்றைச் சேர்ப்பது உங்கள் கடமையாவதுடன் பாடசாலைக் கல்வியூடாக நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு மற்றும் திறன்கள் போன்றவையே உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன என்பதையும் நீங்கள் நன்கு கவனத்திற்கொள்ள வேண்டும். நீங்கள் சமூகத்தில் எந்த நிலையிலிருந்தபோதும் சகல தடைகளையும் தாண்டி சமூகத்தில் மிக உயர்ந்ததொரு இடத்திற்குப் பயணிக்கும் ஆற்றல் கல்வி மூலமாகவே உங்களுக்குக் கிடைக்கின்றது என்பதை நீங்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

எனவே இலவசக் கல்வியின் சிறந்த பிரதிபலனைப் பெற்று, மதிப்பு மிக்கதொரு பிரசையாக நாளைய உலகை நீங்கள் வெற்றி கொள்வதற்கும் இந்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இலங்கையின் நாமத்தை இலங்கச் செய்வதற்கும் உங்களால் இயலுமாகட்டும் என கல்வி அமைச்சர் என்ற வகையில் நான் பிரார்த்திக்கின்றேன்.



**அகில விராஜ் காரியவசம்**
**கல்வி அமைச்சர்**

## முன்னுரை

*நீங்கள் பிறந்திருப்பது இந்து சமுத்திரத்தின் நித்திலம் எனப் போற்றப்படக்கூடிய ஒரு நாட்டிலாகும். உங்கள் நாட்டை ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது அது ஒரு சிறிய நாடாகத் தென்பட்டாலும் அதன் பெறுமதி விலைமதிப்பற்றதாகும். இவ்வாறான பெருமிதமிக்கதொரு மண்ணில் பிறந்துள்ள நீங்கள் அனைவரும் உண்மையிலேயே அதிஷ்டசாலிகள். மாணவர்களாகிய நீங்கள் அனைவரும் நன்கு கல்வி கற்று நற்குணமும் அறிவும் சக்தியும்மிக்க பிரசைகளாகி, எதிர்கால உலகை ஒளியூட்டுவீர்கள் என்பதே எமது ஒரே எதிர்பார்ப்பாகும். அந்த எதிர்பார்ப்பை அடைவதற்குக் கல்விக்கான சகல வசதிகளையும் இலவசமாக வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்கின்றது. அதன் ஒரு கட்டமாகவே இந்நூலையும் அது உங்களுக்கு வழங்குகின்றது.*

*ஆரம்பப் பிரிவுப் பாடத்திட்டத்திற்கேற்ப இதுவரைக்கும் தரம் 1, 2, 3, 4 இற்கான புதிய பாடநூல்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டு தரம் 5 இற்கான புதிய பாடநூல்களின் அறிமுகத்துடன் ஆரம்பப் பாடத்திட்ட மறுசீரமைப்பு எனும் இக்கட்டம் நிறைவு பெறுகின்றது. தரம் 1 முதல் தரம் 5 வரை கற்கும் ஆரம்பப் பிரிவு மாணவருக்காக அரசு ஏறக்குறைய 30 வகையான பாடநூல்களைத் தயாரித்து வழங்குகின்றது. இவ்விலைமதிப்பற்ற வளத்தினைப் பயன்படுத்தி வாழ்க்கையை வளமானதாக ஆக்கிக் கொள்வது உங்கள் அனைவரினதும் கடமையாகும்.*

*இப்பாடநூலை உங்கள் கைகளில் தவழச்செய்வதில் அர்பணிப்புடன் செயலாற்றிய எழுத்தாளர், பதிப்பாசிரியர் குழு உறுப்பினர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.*

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**
*கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்*
*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்*
*இசுருபாய*
*பத்தரமுல்ல.*
*2019.04.10*

## கண்காணிப்பும் மேற்பார்வையும்

**டபிள்யூ.எம். ஜயந்த விக்கிரமநாயக்க**
**கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,**
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## வழிகாட்டல்

**டபிள்யூ.ஏ. நிர்மலா பியசீலி**
**கல்வி வெளியீட்டு ஆணையாளர்,**
(அபிவிருத்தி)
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## இணைப்பாக்கம்

**அஷ்ஷெய்க் எம்.ரீ. அப்துர் ரஹ்மான்**
**உதவிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,**
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## எழுத்தாளர் குழு

**ஜனாப் எஸ்.எம். ஆர். சூதீன்**
**ஆசிரிய கல்வியியலாளர்,**
ஸாஹிரா கல்லூரி, கொழும்பு 10.

**ஜனாப் எம்.எச்.எம். நாளிர்**
**வளவாளர்,**
தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.
**சிரேஷ்ட ஆசிரியர்** (ஓய்வு).

## பதிப்பாசிரியர் குழு

**ஜனாப் இஸட். தாஜுதீன் (இ.க.நி.சே)**
**பணிப்பாளர்,**
முஸ்லிம் பாடசாலை அபிவிருத்திப் பிரிவு,
கல்வி அமைச்சு.

**அஷ்ஷெய்க் ஜே.டீ. கரீம்தீன்**
**சிரேஷ்ட விரிவுரையாளர்,**
கல்விப் பீடம்,
திறந்த பல்கலைக் கழகம்,
நாவல, நுகேகொட.

**அஷ்ஷெய்க் ஜே.எம். ஐஸார்**
**விரிவுரையாளர்,**
இஸ்லாம் அரபுப் பிரிவு,
தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

## தளக்கோலம், கணினி வடிவமைப்பு

**எச்.எப். ரிஸ்னா**

**கணினி வடிவமைப்பாளர்,**
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## அட்டைப்படம், சித்திரம்

**ஓவியர் எம்.ஜே.எம். மன்ஸூர்**

**பிரதி அதிபர்,**
வித்தியாலோக மகா வித்தியாலயம்
பலாங்கொட.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அல்லாஹ் போசிப்பவன் | 1 |
| 2. | அல்லாஹு ராஸிகுனா | 3 |
| 3. | கலிமதுத் தம்ஜீத் | 4 |
| 4. | உரிய சந்தர்ப்பத்தில் கூறுவோம் | 6 |
| 5. | மலக்குகள் | 8 |
| 6. | மலக்குகளின் பணிகள் | 10 |
| 7. | அல்குர்ஆன் - 1 | 12 |
| 8. | அல்குர்ஆன் - 2 | 14 |
| 9. | வுழூஉ செய்வோம் | 16 |
| 10. | வுழூஉ செய்யும் சந்தர்ப்பங்கள் | 20 |
| 11. | தொழும் முறை - 1 | 22 |
| 12. | ஸூரத்துல் பாத்திஹா | 26 |
| 13. | தொழும் முறை - 2 | 28 |
| 14. | அத்தஹிய்யாத் | 31 |
| 15. | நல்ல பிள்ளை | 33 |
| 16. | சிறந்த வகுப்பு | 35 |
| 17. | நல்ல மாணவன் | 37 |
| 18. | நல்ல மாணவர்கள் | 39 |
| 19. | பிறரை மதிப்போம் | 41 |
| 20. | விருந்துபசாரம் | 43 |
| 21. | சுற்றாடலைச் சுத்தமாக வைப்போம் | 45 |
| 22. | மகிழ்ச்சியான வீடு | 47 |
| 23. | தியாகம் செய்த தம்பதி | 49 |
| 24. | நபி صلى الله عليه وسلم அவர்களின் நற்பண்புகள் - 1 | 51 |
| 25. | நபி صلى الله عليه وسلم அவர்களின் நற்பண்புகள் - 2 | 53 |
| 26. | மகானின் முன்மாதிரி | 56 |

# 1 அல்லாஹ் போசிப்பவன்

அல்லாஹ் அன்பாளன்.

அவன் இரக்கம் உள்ளவன்.

அவன் வானத்தைப் படைத்தான்.

பூமியைப் படைத்தான்.

பூமியில் உயிரினங்களைப் படைத்தான்.





உயிரினங்களைப் போசிக்கப் பயிர்களை வளர்க்கிறான்.

பயிர்கள் வளர மழையைப் பெய்விக்கிறான்.

பூமி மழையால் வளம் பெறுகிறது.

பூமியில் இருக்கும் அனைத்தையும் உணவளித்துப் போசிக்கின்றான்.

அவனே ரஸ்ஸாக் ஆவான்.

**பயிற்சி :**

இடைவெளி நிரப்புக.

(இரக்கம், ரஸ்ஸாக், உயிரினங்களை, அல்லாஹ், மழையை)

1. வானத்தை .............................. படைத்தான்.
2. அல்லாஹ் பூமியில் .................. படைத்தான்.
3. பயிர்கள் வளர ...................... பெய்வித்தான்.
4. அவன் .......................... உள்ளவன்.
5. அவன் .......................... ஆவான்.

# 2 அல்லாஹு ராஸிகுனா




அல்லாஹு ஹாலிகுனா
அல்லாஹு ராஸிகுனா
அல்லாஹு ஹாதீனா
ஸுப்ஹான மவ்லானா

அல்லாஹ்வே படைத்தவனே
ரஸ்ஸாக்காய் அமைந்தவனே
நேர்வழியை அருள்பவனே
தூயோனே எசமானே

## பயிற்சி :

1. பாடத்திலுள்ள அரபுப் பாடலை இசையோடு பாடுங்கள்.

2. இப்பாடலிலுள்ள அல்லாஹ்வின் பண்புகள் மூன்றைத் தருக.

# 3 கலிமதுத் தம்ஜீத்

كَلِمَةُ التَّمْجِيْد

سُبْحَانَ اللهِ وَالْحَمْدُ لِلّٰهِ وَلَا اِلٰهَ
اِلَّا اللّٰهُ وَ اللهُ اَكْبَرُ وَلَا حَوْلَ
وَلَا قُوَّةَ اِلَّا بِاللهِ الْعَلِيِّ الْعَظِيْمِ

ஸுப்ஹானல்லாஹி வல்ஹம்துலில்லாஹி வலா
இலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர்.
வலா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹில்
அலிய்யில் அழீம்.

அல்லாஹ்வைத் தூய்மைப்படுத்துகிறேன்.
எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே.
வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர
வேறு யாருமில்லை.
அல்லாஹ் மிகப் பெரியவன்.
உயர்ந்தவனும் மகத்துவம் மிக்கவனுமாகிய.
அல்லாஹ்வின் உதவியின்றி
சக்தியோ பலமோ இல்லை.

இக் கலிமாவை மனனம் செய்வோம்.
உரிய சந்தர்ப்பத்தில் ஓதி வருவோம்.

**பயிற்சி :**

பொருத்தமான சொல்லைத் தெரிந்து வெற்றிடத்தை நிரப்புங்கள்.

(வணக்கத்துக்குரியவன், பெரியவன், அல்லாஹ்வை, புகழும், அல்லாஹ்வின்)

1. நான் ..................... தூய்மைப்படுத்துகிறேன்.
2. எல்லாப் ..................... அல்லாஹ்வுக்கே.
3. அல்லாஹ்வைத் தவிர ......................... யாருமில்லை.
4. அல்லாஹ் மிகப் .................................
5. ......................... உதவியின்றி எதையும் செய்ய முடியாது.

# 4 உரிய சந்தர்ப்பத்தில் கூறுவோம்



ஆச்சரியமான ஒன்றைக் காணும்போது

سُبْحَانَ اللّٰهِ - ஸுப்ஹானல்லாஹ்

என்போம்.



அல்லாஹ்வின் அருள்கள் கிடைக்கும்போது

اَلْحَمْدُ لِلّٰهِ - அல்ஹம்துலில்லாஹ்

என்போம்.

எமது செயல்கள் சிறப்பாக அமையும்போது

اَللّٰهُ اَكْبَرُ - அல்லாஹு அக்பர்

என்போம்.

| | |
|---|---|
| سُبْحَانَ اللّٰهِ | அல்லாஹ் தூயவன் |
| اَلْحَمْدُ لِلّٰهِ | எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே |
| اَللّٰهُ اَكْبَرُ | அல்லாஹ் மிகப் பெரியவன் |

**பயிற்சி :**

இணையுங்கள்.

| அ | ஆ |
|---|---|
| அல்லாஹ்வை தூய்மைப்படுத்த | அல்லாஹு அக்பர் |
| அல்லாஹ்வை பெருமைப்படுத்த | அல்ஹம்துலில்லாஹ் |
| அல்லாஹ்வைப் புகழ | ஸுப்ஹானல்லாஹ் |

# 5 மலக்குகள்

மலக்குகள் அல்லாஹ்வின் படைப்புகள் ஆவர்.

அல்லாஹ் அவர்களை ஒளியினால் படைத்தான் அதனால் அவர்கள் தனித்துவமானவர்கள்.

அவர்கள் எப்போதும் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு நடப்பார்கள். அவர்களின் எண்ணிக்கையை அல்லாஹ்வே அறிவான்.

அவர்களில் பத்துப் பேர் முக்கியமானவர்கள்.

அவர்கள் வருமாறு:

1. ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம்
2. மீக்காயீல் அலைஹிஸ்ஸலாம்
3. இஸ்ராபீல் அலைஹிஸ்ஸலாம்
4. இஸ்ராயீல் அலைஹிஸ்ஸலாம்
5. முன்கர் அலைஹிஸ்ஸலாம்
6. நகீர் அலைஹிஸ்ஸலாம்
7. றகீப் அலைஹிஸ்ஸலாம்
8. அதீத் அலைஹிஸ்ஸலாம்
9. மாலிக் அலைஹிஸ்ஸலாம்
10. ரிழ்வான் அலைஹிஸ்ஸலாம்

## பயிற்சி :

அ. சரி பிழை கூறுக.

1. மலக்குகளின் எண்ணிக்கையை அல்லாஹ் அறிவான். ( )
2. அல்லாஹ் அவர்களை மண்ணினால் படைத்தான். ( )
3. மலக்குகள் அல்லாஹ்வின் படைப்புகள் ஆவர். ( )
4. அவர்கள் அல்லாஹ்வுக்கு மாறு செய்வார்கள். ( )

ஆ. மலக்குகள் பதின்மரினதும் பெயர்களை மனனமிட்டுக் கூறுங்கள்.

# 6 மலக்குகளின் பணிகள்

அல்லாஹ் மலக்குகளைப் படைத்துள்ளான். அவர்களுக்குப் பலபணிகளைஒப்படைத்துள்ளான். மலக்குகளில் பத்துப்பேருக்கு சில பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு:

இறைவன் தூதை நபிமார்க்கு
இனிதே சொல்பவர் ஜிப்ரீலே
நீர் நிலை காற்றின் பொறுப்பாக
நியமித்தவரே மீக்காயீல்

ஸூரை ஊதும் மலக்காக
காத்தே இருப்பவர் இஸ்ராபீல்
மனித உயிரை எடுப்பதற்கு
பொறுப்பாய் அமைந்தவர் இஸ்ராயீல்

கபுரில் கேள்வி கேட்பவரோ
முன்கர் நக்கீர் என்போரே
மனிதர் செய்யும் நன்மைகளை
பதிவார் மலக்கு ரகீப் அவரே

தீமை பதிவார் அதீத் அவரே
சுவன அதிபதி ரிழ்வானே
நரகின் அதிபதி மாலிக்கே
பதின்மரை நம்பி நடப்போமே

## பயிற்சி :

### இணையுங்கள்

| | |
|---|---|
| ரகீப் அலைஹிஸ்ஸலாம் | தூது கொண்டு வருபவர் |
| ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் | சுவர்க்கத்துக்கு அதிபதி |
| அதீத் அலைஹிஸ்ஸலாம் | நன்மையைப் பதிபவர் |
| மாலிக் அலைஹிஸ்ஸலாம் | ஸூர் ஊதுபவர் |
| இஸ்ராபீல் அலைஹிஸ்ஸலாம் | தீமைகளைப் பதிபவர் |
| ரிழ்வான் அலைஹிஸ்ஸலாம் | நரகின் அதிபதி |

# 7 அல்குர்ஆன் - 1



அல்குர்ஆன் எமது
வேத நூல் ஆகும்.

அது அல்லாஹ்வினால்
இறக்கப்பட்டது.

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி
வஸல்லம் அவர்களுக்கு இறக்கப்பட்டது.

அவர்கள் அதனைப்
போதித்தார்கள்.

அல்குர்ஆன் அரபு மொழியில்
இறக்கப்பட்டது.

அல்குர்ஆன் பரிசுத்தமான
வேத நூலாகும்.

**பயிற்சி :**

இடைவெளி நிரப்புக.

(அல்லாஹ்வினால், பரிசுத்தமான,
அல்குர்ஆன், அரபு)

1. எமது வேத நூல் ...................... ஆகும்.
2. அது ............................... அருளப்பட்டது.
3. அது .......................... நூலாகும்.
4. அது......................... மொழியில் உள்ளது.

# 8 அல்குர்ஆன் - 2



அல்குர்ஆனை வுழூஉவுடன் தொடுவோம்.

அஊது, பிஸ்மில் சொல்லி ஓதுவோம்.

அதனை ஓதுவதைச் செவி தாழ்த்திக் கேட்போம்.

தினமும் ஓதுவோம்.

அதனை ஓதுவதால் நன்மை கிடைக்கும்.

அதனைக் கற்று அதன்படி நடப்போம்.

அதன்படி நடப்பதால் சுவர்க்கம் கிடைக்கும்.

## பயிற்சி :

பொருத்தமான சொல்லை வைத்து வெற்றிடத்தை நிரப்புங்கள்.

(தினமும், வுழூஉவுடன், அஊதுபிஸ்மில், நன்மை, சுவர்க்கம்)

1. அல்குர்ஆனை ........................ தொடுவோம்.
2. அதனை .............................. ஓதி வருவோம்.
3. அதன்படி நடந்தால் .................. கிடைக்கும்.
4. அதனை ஓதுவதால் ..................... கிடைக்கும்.
5. அல்குர்ஆனை ................சொல்லி ஓதுவோம்.

# 9 வுழூஉ செய்வோம்

நாம் தொழுவதற்கு முன் வுழூஉ செய்வோம்.
அதனைப் பின்வரும் ஒழுங்கில் செய்வோம்.
வுழூஉ செய்வதற்கு சுத்தமான
நீரைப்பயன்படுத்துவோம்.

முதலில்
இரு கைகளையும்
மணிக்கட்டு வரை
கழுவுவோம்.






வாயைக்
கொப்பளிப்போம்.

மூக்கை
நீர் செலுத்தி
சுத்தம்
செய்வோம்.





''வுழூஉ செய்கிறேன்''
என்ற நிய்யத்துடன்
முகத்தைக் கழுவுவோம்.

முழங்கை உட்பட
இரு கைகளையும்
கழுவுவோம்.





தலையை
நீரினால் தடவி
மஸ்ஹு
செய்வோம்.



இரு காதுகளையும்
நீரினால் தடவி
மஸ்ஹு செய்வோம்.



கரண்டை உட்பட
இரு கால்களையும்
கழுவுவோம்.

எப்போதும் வலப்பக்கத்தை முற்படுத்துவோம். அல்லாஹ்வின் நினைவுடன் வுழூஉ செய்வது முக்கியமாகும்.

## பயிற்சி :

### பகுதி "அ"

"ஆ" பகுதியிலிருந்து விடையைத் தெரிவு செய்து எழுதுங்கள்.

1. வுழூஉசெய்வதற்கு எப்படியான நீர் வேண்டும்?
2. எந்த உறுப்பைக் கழுவும்போது நிய்யத் வைக்க வேண்டும்?
3. முகத்தைக் கழுவிய பின் எந்த உறுப்பைக் கழுவ வேண்டும்?
4. தலையை என்ன செய்ய வேண்டும்?
5. கால்களை எதுவரை கழுவ வேண்டும்?

### பகுதி "ஆ"

கரண்டை உட்படக் கழுவ வேண்டும்

இரண்டு கைகளை

முகத்தை

சுத்தமான நீர்

நீரினால் தடவ வேண்டும்

# 10 வுழூஉ செய்யும் சந்தர்ப்பங்கள்

நாம் எப்போதும் சுத்தமாக இருக்க வேண்டும். குளித்துச் சுத்தமாக இருப்பதுபோலவே வுழூஉ செய்தும் சுத்தமாக இருக்க வேண்டும். அவ்வாறு சுத்தமாக இருப்பதை அல்லாஹ் விரும்புகின்றான். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் விரும்பினார்கள். எனவே பின்வரும் சந்தர்ப்பங்களில் வுழூஉ செய்துகொள்வோம்.

### வுழூஉ செய்யும் சந்தர்ப்பங்கள்

- காலை எழுந்ததும்
- தொழுவதற்கு முன்
- அல்குர்ஆனைத் தொடுமுன்
- தூங்குவதற்கு முன்
- கஃபதுல்லாவைத் தவாப் செய்ய முன்

## பயிற்சி :

பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் குறிப்பிடுக.

1. வுழூஉ என்பது உடல் முழுவதையும் சுத்தம் செய்வதாகும். (   )
2. வுழூஉவுடன் இருப்பதை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விரும்பினார்கள். (   )
3. வுழூஉ இல்லாமல் தொழுதால் தொழுகை கூடும். (   )
4. வுழூஉவின்போது சுத்திகரிக்கப்பட வேண்டிய உறுப்புகள் மூன்றாகும். (   )
5. இரவில் தூங்குமுன் வுழூஉ செய்தல் வேண்டும். (   )

# 11 தொழும் முறை - 1

நாங்கள் அல்லாஹ்வின் அடியார்கள். அவன் எம்மைத் தொழும்படி ஏவியுள்ளான். நாம் தினமும் ஐந்து நேரம் தொழ வேண்டும்.

- ஸுப்ஹு (அதிகாலை)
- லுஹர் (பகல்)
- அஸர் (பிற்பகல்)
- மஃரிப் (மாலை சூரியன் மறைந்ததும்)
- இஷா (இரவு)








அஸர்




மஃரிப்




இஷா

நாம்
தொழும்போது
நிலையில்
நிற்கின்றோம்.







வளைந்து ருகூஉ செய்கிறோம்.

தரையில் தலையை வைத்து ஸுஜூத் செய்கிறோம்.

ஸூரத்துல் பாத்திஹா, அத்தஹிய்யாத் என்பன தொழுகையின் முக்கிய ஓதல்களாகும்.

தொழுகையில் தஸ்பீஹ் (ஸுப்ஹானல்லாஹ்), தஹ்மீத் (அல்ஹம்துலில்லாஹ்), தக்பீர் (அல்லாஹு அக்பர்), இஸ்திஃபார் (அஸ்தஃபிருல்லாஹ்) போன்ற திக்ருகளை ஓதுகின்றோம்.

ஐந்து நேரமும் தொழுவது முஸ்லிம்களின் கட்டாய கடமையாகும்.

ஆதலால் நாமும் தொழுகையை ஒழுங்காக நிறைவேற்றி வருவோம்.

## பயிற்சி :

பொருத்தமான சொல்லை வைத்து வெற்றிடங்களை நிரப்புங்கள்.

(ஸூரத்துல் பாத்திஹா, ஸுப்ஹு, ஸுஜூத், நேரம், ஐந்து)

1. தினமும் நாம் ................................ நேரம் தொழுது வரல் வேண்டும்.
2. தொழுவதற்கு ............................. குறிக்கப்பட்டுள்ளது.
3. தொழுகையில் தலையை நிலத்தில் பதிப்பது ............................... எனப்படும்.
4. அதிகாலையில் நிறைவேற்றுவது .................... .............. தொழுகை ஆகும்.
5. தொழுகையில் கட்டாயமாக ......................... ஓத வேண்டும்.

# 12 ஸூரத்துல் பாத்திஹா


سورة ٢ الفاتحة

سُوْرَةُ الْفَاتِحَةِ مَكِّيَّةٌ وَّهِيَ سَبْعُ اٰيٰتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۙ﴿۱﴾ الرَّحْمٰنِ
الرَّحِيْمِ ۙ﴿۲﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ؕ﴿۳﴾ اِيَّاكَ نَعْبُدُ
وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ؕ﴿۴﴾ اِهْدِنَا الصِّرَاطَ
الْمُسْتَقِيْمَ ۙ﴿۵﴾ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ﴿۶﴾
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

منزل ١

ஸூரத்துல் பாத்திஹா
ஓதுவதைக் கேட்போம்.


அதனை ஓதிப் பழகுவோம்.
அதனை மனனம் செய்வோம்.

## செயற்பாடு :

1. ஸூரத்துல் பாத்திஹாவை ஓதுங்கள்.
2. ஸூரத்துல் பாத்திஹாவை மனனமிடுங்கள்.

# 13 தொழும் முறை - 2

நதீர் ஏழு வயது நிரம்பியவன். அவனை எல்லோரும் பணிவான நல்ல பிள்ளை என்று பாராட்டுவார்கள். அவன் எல்லோருக்கும் உதவி செய்வான்.



அவன் அதிகாலையிலேயே எழுந்து தனது வாப்பாவுடன் ஸுப்ஹு தொழுகைக்காக மஸ்ஜிதுக்குச் செல்வான்.

அதேபோல் பகல் நேரத்தில் அப்பாவுடன் லுஹர் தொழுகைக்காகச் செல்வான்.

பிற்பகலில் அஸர் தொழுகைக்காக நண்பர்களுடன் செல்வான்.

சூரியன் மறைந்ததும் மஃரிப் தொழுகைக்காக அண்ணனுடன் பள்ளி வாசலுக்குச் செல்வான்.

இரவு நேரத்தில் இஷா தொழுகைக்காக அப்பாவுடன் செல்வான்.

ஐந்து நேரமும் பள்ளிவாசலுக்குச் சென்று அமைதியாகத் தொழுவான்.

நாமும் தினமும் பள்ளிவாசலுக்குச் செல்வோம்.

உரிய முறையில் தொழுது நல்ல பிள்ளைகளாக உயர்வடைவோம்.

அல்லாஹ்வின் அன்பைப் பெறுவோம்.

## பயிற்சி :

இணைக்குக.

ஐந்து நேரத் தொழுகைகளையும் எப்போது நிறைவேற்றுவீர்கள் என்பதை பொருத்தமானவாறு இணையுங்கள்.

| | |
|---|---|
| 1. ஸுப்ஹு | பகல் நேரம் |
| 2. லுஹர் | இரவு நேரம் |
| 3. அஸர் | அதிகாலை |
| 4. மஃரிப் | பிற்பகல் |
| 5. இஷா | மாலை சூரியன் மறைந்ததும் |

# 14 அத்தஹிய்யாத்

தொழுகையில் ஓத வேண்டிய முக்கியமான ஓதல்களில் அத்தஹிய்யாத்தும் ஒன்றாகும்.

اَلتَّحِيَّاتُ الْمُبَارَكَاتُ الصَّلَوَاتُ الطَّيِّبَاتُ لِلّٰهِ

اَلسَّلَامُ عَلَيْكَ اَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللّٰهِ وَبَرَكَاتُهُ .

اَلسَّلَامُ عَلَيْنَا وَعَلٰى عِبَادِ اللّٰهِ الصَّالِحِيْنَ .

اَشْهَدُ اَنْ لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ

وَاَشْهَدُ اَنَّ مُحَمَّداً رَّسُوْلُ اللّٰهِ

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ



நாமும் அத்தஹிய்யாத்தை மனனமிடுவோம். அதனைத் தொழுகையில் ஓதி வருவோம்.

## செயற்பாடு :

1. அத்தஹிய்யாத்தை மனனமிடுங்கள்.
2. அதனை ஓதுங்கள்.

# 15 நல்ல பிள்ளை




ஹாஜரா நல்ல பிள்ளை.

அவள் தினமும் குளிப்பாள்.

உடம்பிலுள்ள அழுக்குகளை நீக்குவாள்.

தனது உடைகளைக் கழுவி உடுப்பாள்.

தான் பயன்படுத்தும் பொருள்களைச் சுத்தமாக வைப்பாள்.

கழிவறையையும் சுத்தமாக வைப்பாள்.

தினமும் தொற்று நீக்கி அதனைக் கழுவுவாள்.

கழிவறை செல்லுமுன் பாதணி அணிவாள்.

உரிய துஆவை ஓதுவாள். கழிவகற்றி இடக்கையால் சுத்தம் செய்வாள்.

வெளியேறிய பின்பும் நீருற்றுவாள். வெளியேறி துஆ ஓதுவாள். கழிவறையை மூடி வைப்பாள்.

நாமும் நல்ல பழக்கங்களை மேற்கொண்டு நல்ல பிள்ளைகளாக வளர்வோம்.

**பயிற்சி :**

ஹாஜரா தன்னை எப்படிச் சுத்தமாக்கிக் கொள்வாள் என்பதைக் குறிப்பிடுங்கள்.

# 16 சிறந்த வகுப்பு



ஒரு நாள் மூன்றாம் தர மாணவர்கள் சிரமதானப் பணியில் ஈடுபட்டார்கள்.

அவர்கள் பாடசாலைச் சூழலைச் சுத்தம் செய்தார்கள்.

சிலர் பாதையைச் சுத்தம் செய்தார்கள்.

சிலர் தோட்டத்தைச் சுத்தம் செய்தார்கள்.

சிலர் பெற்றோர் தங்கி நிற்கும் பகுதியைச் சுத்தம் செய்தார்கள்.

சிலர் சிற்றுண்டிச்சாலையைச் சுத்தம் செய்தார்கள்.

அவர்களோடு ஆசிரியர்களும் பெற்றோர்களும் கலந்து கொண்டார்கள்.

அதிபர் எல்லோருக்கும் நன்றி செலுத்தினார்.

வகுப்பறைச் சூழலை எப்போதும் சுத்தமாக வைப்போம்.

**பயிற்சி :**

மூன்றாம் தர மாணவர்கள் சிரமதானப் பணியில் எவற்றைச் சுத்தம் செய்தார்கள்?

1.
2.
3.
4.

# 17 நல்ல மாணவன்

ரைஹான் மூன்றாம் தரத்தில் படிக்கிறான்.

அவன் தினமும்  அதிகாலையில் எழும்புவான்.

காலைக் கடன்களை முடிப்பான்.



வுழூஉ செய்து தொழுகையை நிறைவேற்றுவான்.

அல்குர்ஆனை மனனம்செய்வான்.

பாடசாலைக்குச் செல்ல ஆயத்தமாவான்.

புத்தகப் பையை முன்கூட்டியே ஒழுங்குபடுத்தி வைத்திருப்பான்.

பெற்றோரிடம் விடைபெற்றுப் பாடசாலை செல்வான்.

உரிய நேரத்தில் பாடசாலையை அடைவான்.

ஸலாம் சொல்லிப் புன்முறுவலுடன் வகுப்புக்குள் நுழைவான்.

தொடர்ந்து வரும் சகோதரர்களை முகம் மலர வரவேற்பான்.

**எனவே நாமும் உரிய நேரத்தில் உரிய வேலைகளைச் செய்யப் பழகிக்கொள்வோம்.**

**பயிற்சி :**

ரைஹான் என்ற மாணவனிடமிருந்து நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டிய நல்ல பண்புகள் ஐந்தைக் குறிப்பிடுங்கள்.

1.

2.

3.

4.

5.

# 18 நல்ல மாணவர்கள்

நாங்கள் நல்ல மாணவர்கள்.

எதனையும் ஒழுங்காகச் செய்வோம்.

வகுப்பறைக்குள் நுழைந்ததும், குறிப்பிட்ட இடத்தில் புத்தகப் பையை வைப்போம்.

தளபாடங்களை ஒழுங்குபடுத்துவோம்.

குப்பைகளைக் கூட்டியோ, பொறுக்கியோ குப்பைத் தொட்டியில் இடுவோம்.

ஆசிரியரின் மேசையில் விரிப்பை விரிப்போம்.

பூச்சாடியை மேசை நடுவில் வைப்போம்.

வகுப்புக்கு வரும் ஆசிரியரை ஸலாம் கூறி வரவேற்போம்.



உரியநேரத்தில் தொழுகையை நிறைவேற்றுவோம்.


பகலுணவைக் குடும்பத்தினருடன் சேர்ந்து உண்போம்.

அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவோம்.

**பயிற்சி :**

வகுப்பறையை நீங்கள் எவ்வாறு ஒழுங்கு படுத்துவீர்கள் என எழுதுங்கள்.

# 19 பிறரை மதிப்போம்



நஸீம் பரீட்சையில் முதலிடம் பெற்றான். அதனால் அவனது பெற்றோர் பெருமகிழ்ச்சி அடைந்தனர். அவனது வகுப்புத் தோழர்களுக்குத் தேநீர் விருந்தளித்தனர்.

அதன்மூலம் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். நஸீம் நண்பர்களை இன்முகத்துடன் வரவேற்றான். அறுசுவைப் பண்டங்களைப் பரிமாறினான். நகைச்சுவையோடு உறவாடினான்.

வகுப்பு மாணவர்கள் நஸீமுக்குப் பரிசொன்றை வழங்கினர். அவன் அவர்களுக்குத் தனது நன்றியைத் தெரிவித்தான்.

அவனது பெற்றோரும் வகுப்பு மாணவர்களைப் பாராட்டினர்.

**பயிற்சி :**

பொருத்தமான சொல்லைக்கொண்டு இடைவெளி நிரப்புக.

1. நஸீம் பரீட்சையில் ..................... பெற்றான்.
2. பெற்றோர் அவனது தோழர்களுக்கு ............... விருந்தளித்தனர்.
3. நஸீம் நண்பர்களை ................ வரவேற்றான்.
4. நண்பர்கள் நஸீமுக்கு ................. வழங்கினர்.

# 20 விருந்துபசாரம்

அன்று ஹாதியின் வீட்டில் திருமணம் நிகழ்ந்தது.

வைபவத்திற்கு மூத்தோர்களும், பெரியோர்களும், நண்பர்களும் வந்தனர்.

ஹாதி மூத்தோரை மரியாதையோடு வரவேற்றான். சம்பிரதாயப்படி பன்னீர் தெளித்தான். கைகளில் மணம் பூசி அழைத்தான்.



பெரியவர்கள் அவனது செயலைப் பாராட்டினர். அவனோடு முஸாபஹா செய்தனர். அவர்கள் அவனை முத்தமிட்டனர். அவனும் அவர்களின் கைகளை முத்தமிட்டான்.

ஹாதி, அவர்களுக்கு விருந்தளித்து நன்றாக உபசரித்தான்.

மூத்தோரும், பெரியோரும், நண்பர்களும் ஹாதிக்கு நன்றி சொல்லிவிட்டு சந்தோசமாக வீடு சென்றனர்.

## பயிற்சி :

பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

1. ஹாதியின் வீட்டிற்கு யார் யாரெல்லாம் வந்தனர்?

2. ஹாதி மூத்தோரை எவ்வாறு வரவேற்றான்?

3. விருந்தினர்கள் இறுதியில் வெளியேறும்போது என்ன கூறினார்கள்?

# 21 சுற்றாடலைச் சுத்தமாக வைப்போம்

மக்கள் ஒன்றுகூடும் இடங்கள் பல. அவற்றுள் பஸ் தரிப்பிடமும் ஒன்றாகும். அது பயணிகள் தங்கி நிற்பதற்காக அமைக்கப்பட்டுள்ளது.

அங்கு குப்பை போடுவது கூடாது. அழுக்குகளை எறிவதும் கூடாது. அதன் சுவர்களில் எழுதவோ, கீறவோ கூடாது. விளம்பரங்களை ஒட்டக் கூடாது. அங்கே எச்சில் துப்பக் கூடாது.



இவ்வாறு மக்கள் கூடும் சந்தைகள், கடைவீதிகள், விளையாட்டிடங்கள் போன்றவற்றையும் அசுத்தப் படுத்தாமல் பாதுகாக்க வேண்டும்.

அப்போதுதான் நாம் ஆரோக்கியமாக வாழலாம்.



சுற்றாடலை அசுத்தப்படுத்தாமல் பாதுகாப்போம்.


## பயிற்சி :

நாம் சுற்றாடலைச் சுத்தமாக வைப்பதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய நடவடிக்கைகள் நான்கை எழுதுக.

# 22 மகிழ்ச்சியான வீடு

நாம் அழகாகவும் ஒழுங்காகவும் சுத்தமாகவும் இருக்க வேண்டும்.

எமது வீட்டையும் அழகாகவும் ஒழுங்காகவும் சுத்தமாகவும் வைக்க வேண்டும்.



பொருட்களை அங்குமிங்கும் சிதறியதாக வைக்கக் கூடாது.

உடைகளைக் கண்டவாறு சிதறி வைக்கக் கூடாது. அவற்றை அழகிய முறையில் ஒழுங்காக வைத்திருக்க வேண்டும்.

குறிப்பாகப் படுக்கை அறை, உண்ணும் அறை, சமையலறை போன்றவற்றை அழகாகவும் சுத்தமாகவும் ஒழுங்காகவும் வைக்க வேண்டும்.

அப்போதுதான் வீடு மகிழ்ச்சியான இடமாக இருக்கும். ஆகவே வீட்டை அழகாகவும் சுத்தமாகவும் வைப்போம். வீட்டிலுள்ள பொருட்களை ஒழுங்காக வைப்போம்.

## பயிற்சி :

உங்கள் வீட்டை நீங்கள் எவ்வாறு அழகாக வைத்திருப்பீர்கள் என எழுதுக.

1.
2.
3.
4.

# 23 தியாகம் செய்த தம்பதி

ஸஹாபி ஒருவரின் வீட்டுக்கு ஒரு விருந்தாளி வந்தார். அவருக்கு விருந்தளிப்பதற்குப் போதிய உணவு இருக்கவில்லை. விருந்தாளியை வெறுமையாக அனுப்பவும் விரும்பவில்லை. எனினும் அவரை வரவேற்று உபசரித்தார்.

ஸஹாபியும் மனைவியும் இரகசியம் பேசினர். தமது இரவுணவை அவருக்கு வழங்க முடிவெடுத்தனர். விருந்துண்ணும்போது விளக்கைத் தூண்ட வருவது போல வந்து, அணைத்து விட முடிவெடுத்தனர்.



ஸஹாபியும் விருந்தாளியும் ஒன்றாக அமர்ந்தனர். இடையில் வந்த மனைவி, விளக்கை அணைத்தாள். விருந்தாளி உண்ண, ஸஹாபி உண்பது போல் பாசாங்கு செய்தார். உண்டு முடிந்தபின் இருவரும் எழுந்தனர்.

விருந்தாளி மகிழ்வோடு விடைபெற்றார். ஸஹாபியும் மனைவியும் விருந்தாளியை உபசரித்த மகிழ்வில் தூங்க ஆரம்பித்தனர்.

## பயிற்சி :

சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடையாளமிடுங்கள்.

1. ஸஹாபி விருந்தாளியை வரவேற்றார். ( )
2. அவர் விருந்தாளியை உபசரிக்கவில்லை. ( )
3. ஸஹாபியும் மனைவியும் தமது உணவை விருந்தாளிக்குக் கொடுத்தனர். ( )
4. ஸஹாபியின் மனைவி விளக்கைத் தூண்டினார். ( )
5. ஸஹாபியும் மனைவியும் பசியுடன் தூங்கினர். ( )

# 24 நபி صلى الله عليه وسلم அவர்களின் நற்பண்புகள் - I

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நல்ல குணங்களை உடையவர்கள்.

அவர்கள் சிறு வயதிலேயே உண்மை பேசினார்கள். நம்பிக்கையோடு நடந்து கொண்டார்கள்.

அவர்கள் ஹலீமா அம்மையாரிடம் பால் குடித்தார்கள். அப்போது வலப் பக்கத்தால் மட்டுமே பால் குடிப்பார்கள். இடப் பக்கத்தைப் பால்குடி சகோதரனுக்கு விட்டுக் கொடுத்தார்கள். தனக்குப் பாலூட்டிய செவிலித் தாயான அவ்வம்மையாரை கண்ணியப் படுத்தினார்கள்.

வளர்ப்புத் தாயான பாத்திமா பின்த் அஸத் அம்மையாரையும் கண்ணியப்படுத்தினார்கள். இவர்கள் அபூதாலிபின் துணைவியாவார். இவ் வம்மையார் இறந்த போது மிகுந்த கவலை அடைந்தார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நற்குணங்களை அல்லாஹ்வே பாராட்டியுள்ளான்.

## பயிற்சி :

அ. சரி பிழை கூறுக.

1. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நற்குணமுடையவர்கள். ( )
2. அவர்கள் சிறுவயதில் உண்மை பேசினார்கள். ( )
3. அவர்கள் ஹலீமா அம்மையாரின் இடது பக்கத்தால் பால் குடித்தார்கள். ( )
4. அவர்கள் வளர்ப்புத் தாயை கண்ணியப் படுத்தினார்கள். ( )

ஆ. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நற்குணங்கள் மூன்றைக் குறிப்பிடுங்கள்.

1.
2.
3.

# 25 நபி صلى الله عليه وسلم அவர்களின் நற்பண்புகள் - II

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹலீமா அம்மையாரிடம் வளர்ந்தார்கள்.

அவர்கள் தமது பால்குடி சகோதரர்களுடன் விளையாடுவார்கள்.

ஒருநாள் சகோதரர்களைக் காணவில்லை.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹலீமா அம்மையாரிடம் 'சகோதரர்கள் எங்கே?' என்று கேட்டார்கள்.

'அவர்கள் ஆடு மேய்க்கச் சென்றுள்ளார்கள்' என ஹலீமா அம்மையார் கூறினார்.

இவர்கள் தானும் சகோதரர்களுடன் போக வேண்டும் எனக் கூறினார்கள்.

'நீங்கள் நாளை போகலாம்' என ஹலீமா அம்மையார் கூறினார்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் 'நல்லது தாயே' என்று கூறி ஹலீமா அம்மையாரின் பேச்சுக்கு மதிப்புக்கொடுத்தார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சிறுவயதிலேயே தாய்க்குச் சுமையாக இருக்க விரும்பவில்லை. மற்றவர்கள் போல உழைத்து வாழவே விரும்பினார்கள்.

வளர்ந்த பின், மக்காவாசிகளின் ஆடுகளை மேய்த்து வந்தார்கள். அது நபிமார்களின் தொழில் என்றார்கள்.

வாலிபத்தில் பெரிய தந்தையோடு வியாபாரத்துக்கு சென்றார்கள். வேறு சில வியாபாரக் கூட்டங்களுடனும் சென்றார்கள்.

கதீஜா என்ற சீமாட்டியின் பொருள்களையும் கொண்டு சென்றார்கள்.

அவர்களின் நேர்மையான வியாபாரத்தை எல்லோரும் பாராட்டினார்கள்.

நாமும் அவர்களைப் பின்பற்றுவோம்.

## பயிற்சி :

''அ'' பகுதிக்கு பொருத்தமான தொடரை ''ஆ'' பகுதியிலிருந்து தெரிவு செய்து எழுதுங்கள்


பகுதி - அ

1. நபி صلى الله عليه وسلم அவர்கள்
2. ஆடு மேய்த்தல்
3. அவர்கள் கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களுடன்
4. அவர்களின் நற்குணங்களை

பகுதி - ஆ

- நபிமார்களின் தொழில் ஆகும்.
- பெரிய தந்தையோடு வியாபாரத்துக்கு சென்றார்கள்.
- அல்லாஹ் பாராட்டுகிறான்.
- வியாபாரம் செய்தார்கள்

# 26 மகானின் முன்மாதிரி



நுஃமான் என்று ஓர் அறிஞர் இருந்தார்.

அவரை இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி என்றும் அழைப்பர்.

அவர், கல்வியும் நற்பண்பும் உடையவர்.

அவரது அயல் வீட்டில் ஓர் ஏழை வாழ்ந்தான். அவன் பகலில் வேலைக்குச் செல்வான். இரவில் மது அருந்துவான்.

மது மயக்கத்தில் பாடிக் கொண்டிருப்பான். அது இமாம் அவர்களுக்குத் தொல்லையாக இருந்தது. எனினும், எவரிடமும் முறையிடவில்லை.

ஒருநாள் அவன் காவலர்களால் கைது செய்யப்பட்டான். அதைக் கேள்வியுற்ற இமாம் கவலைப்பட்டார்.

காவல் நிலையத்துக்குச் சென்றார். அவனை விடுவிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

விடுதலை பெற்று வந்த அவன் இமாமிடம் மன்னிப்புக் கேட்டான்.

அன்று முதல் தனது கூடாத செயல்களை நிறுத்திக் கொண்டான். நல்ல மனிதனாக வாழ்வதற்கு ஆரம்பித்தான்.

**நல்லாரைக் காண்பதுவும் நன்றே.**

## பயிற்சி :

சுருக்கமான விடை தருக.

1. இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் பெயர் என்ன?
2. அவரது அயல் வீட்டில் வாழ்ந்த ஏழை இரவில் என்ன செய்வான்?
3. அதனை இமாம் அவர்கள் விரும்பினார்களா?
4. அவனது தவறை எவரிடமாவது முறையிட்டார்களா?
5. அவனைக் கைது செய்தோர் யாவர்?
6. இமாம் காவல் நிலையத்துக்குச் சென்றது ஏன்?
7. விடுதலை பெற்ற அவன் இமாமிடம் எதைக் கேட்டான்?
8. முடிவில் அயலவன் என்னவானான்?